பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L - 90
விலங்கியல்
திரு. கெங்கா
(தொகுதிகள்)
தாவரவியல்
திரு. பாலா
(ஒளிததொகுப்பு)
ஆரம்பம்
20 - 05 - 89
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

விலை
ரூ2/50

A/L - 91
இரசாயனவியல்
திரு. சண்
பௌதிகவியல்
திரு. சோதிலிங்கம்
தூய / பிரயோக } கணிதம்
திரு. வெக்டர்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.

சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 19 உ. வியாழக்கிழமை 26 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (01 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-150

# பல்கலைக் கழகங்களுக்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள்

## உயர் கல்வி அமைச்சு மட்டத்தில் யோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 1

நாட்டில் உள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும், மிக விரைவில், சகல அதிகாரங்களும் கொண்ட தகுதி வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படலாம்.

இது சம்பந்தமாக உயர்கல்வி அமைச்சு மட்டத்திலும், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு மட்டத்திலும் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக உதயனுக்கு மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இயங்கும் பல்கலைக்கழகங்களிலும் மாணவர் ஆகராது, வேலை நிறுத்தம் என்று காலத்துக்குக் காலம் பெரும் பிரச்சினைகள் உருவெடுப்பதால், புதிய திட்டம் குறித்து உயர் கல்வி அமைச்சு உப வேந்தர்களுடன் ஆலோசனை நடத்தி வந்தது என்றும் இப்போது தெரிய வந்திருக்கிறது.

உப வேந்தர்கள் தன்னிச்சையாக ஒரு முடிவு எடுக்க முடியாமல் உள்ளனர். அதனால்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



காலம்போற போக்கிலை, கண் நோய் மட்டுமே எத்தினை விதமான வியாதியள் வருமோ எண்டு நினைக்க வேண்டி இருக்கு......!

# வடமராட்சிப் பகுதியில் கண்படல நோய் ஆபத்து!

## பிரெஞ்சு வைத்தியர் குழு கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடமராட்சிப்பகுதியில் 800 பேருக்கு 'கற்று' எனப்படும் கண்படல நோய் உள்ளதாக பிரெஞ்சு வைத்தியர் குழு தெரிவித்துள்ளது.

வடமராட்சிக்கு கடந்த வாரம் விஜயம் செய்த பிரெஞ்சுக் குழுவினர் 2 ஆயிரம் பேருக்கு கண் பரிசோதனை செய்தனர்.

இவர்களில் 800 பேர் 'கற்று' எனப்படும் கண்படல நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டும் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

கண்படல நோயால் பாதிக்கப்பட்டவர்களில் மிக அதிகமானோர் மத்தியதர வகுப்பினர் என்றும் தெரியவந்துள்ளது.

பாதிப்புக்கான காரணத்தை பிரெஞ்சு டாக்டர்கள் ஆய்வு செய்ய உள்ளனர்.

மேற்படி வைத்தியர்குழு கடந்த சனிக்கிழமை தாயகம் திரும்பியது.

மீண்டும் இக்குழு விரைவில் இங்கு வரவிருக்கிறது அப்போது கண்நோய் பாதிப்புக்கான அறிக்கையோடு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-3)

# 17 முச்சக்கர வண்டிகள் யாழ் சமூகசேவைப் பகுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதிக்கு முச்சக்கர வண்டிகள் பதினேழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த கால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்தவர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக ஊழியருக்கான நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ் - பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர், சிற்றூழியர்கள் ஆகியோருக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஆறும் திகதி முதல் எட்டாம் திகதி வரை நடைபெறும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-3)

# கூட்டுறவுச் சங்க நிர்வாகம் மாகாணசபையின் கீழ்

கொழும்பு, ஜூன் 1

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம், மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. டபிள்யூ. பி. எஸ். ஜெயவர்த்தன இத் தகவலைத் தெரிவித்தார்.

இதன்படி கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிர்வாகம், ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், சம்பள முற்பணம் வழங்குவது, இடமாற்றங்கள் மற்றும் இயக்குநர் சபைகளை நியமிப்பது போன்ற நடவடிக்கைகளும் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன (ஓ-எ)

# 6 ஈழத் தமிழ் இளைஞர்கள் தமிழகத்தில் கைது!

சென்னை, ஜூன் 1

ஆறு இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் கைது செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள்கள், தங்கச் சங்கிலிகள் ஆகியவற்றைத் திருடியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே இவர்கள் ஆறுபேரும் காரைக்குடியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சீதப்பா (20), ஹோபன் (24), தியாகு (24), இருதயராஜ் (21), முருகேசன் (26) கலைஞானவேலு (24) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

குறைந்தது 6 மோட்டார் சைக்கிள்களை சந்தேக நபர்கள் களவாடியதாகச் சொல்லப்படுகிறது பழவன்தாங்கல், கே. கே. நகர் விருகம்பாக்கம், ஆவடி, திருமங்கலம் ஆகிய இடங்களில் இத்திருட்டுக்கள் இடம் பெற்றனவாம்.

# இரத்தினபுரியில் வெள்ளம்: மூவர் பலி; 25 ஆயிரம் பேர் பாதிப்பு

இரத்தினபுரி ஜூன் 1

இரத்தினபுரியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் மூன்று சிறுவர்கள் பலியானார்கள். 25 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இரத்தினபுரியில் தொடர்ந்து பெய்த மழையால் களு கங்கை உடைப்பெடுத்தது. இதனால் பாலங்கள் பல அழிக்கப்பட்டதால் பல கிராமங்களின் தொடர்பு அற்றுப்போனது. போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஓ-3)

## பளை ஆஸ்பத்திரியில் இரு சடலங்கள்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 1

தாளையடி, செம்பியன்பற்றுப் பகுதியில் மரணமானதாகக் கூறப்படும் இரு இளைஞர்களின் சடலங்கள் படையினரால் பளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. (ஓ-117)

# ஜீ. சி. ஈ. பெறுபேறு: மாத இறுதியில்?

கொழும்பு, ஜூன் 1

ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பத்திரப்பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாதக் கடைசியில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். (ஓ-எ)

# சிறந்த நடிகை அர்ச்சனா

புதுடில்லி, ஜூன் 1

நடிகை அர்ச்சனா சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு பெற்றார்.

புதுடில்லியில் இடம்பெற்ற 36ஆவது திரைப்படவிழாவில் சிறந்த நடிக, நடிகைகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

அசோக்குமார் தாதா சாஹேப பால்கே விருதைப் பெற்றார்.

சிறந்த நடிகைக்கான பரிசை அர்ச்சனா (படம்: தாசி) பெற்றார்

'ருத்திர வீணை' என்ற தெலுங்குப் படத்துக்கான சிறந்த இயக்குநருக்கான பரிசை கே. பாலச்சந்தர் பெற்றார்

சிறந்த இசையமைப்பாள

(6-ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடு காட்டை நோக்கி நேற்றுக்காலை ஷெல் வீச்சு!

வட்டக்கச்சி, ஜூன் 1

வட்டக்கச்சி, மம்மில்குளம் பகுதியில் இருந்து இரணைமடுக் காட்டுப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை முதல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறியவருகிறது.

அதே சமயம் அப்பகுதியை அண்டிய சில இடங்களில் தேடுதலும் இடம்பெற்றது.

காட்டில் சில இடங்களில் தீப்பற்றி எரிந்ததாகவும், மிருகங்கள் கிராமப் பகுதிகளுக்கு தறிகெட்டு ஓடி வந்ததாகவும் கிராம வாசிகள் தெரிவித்தனர்.

எனினும் சேத விவரம் தெரியவரவில்லை. (ஓ-163)

### சுபநேரம்

10 — 06 — 1989
வைகாசி — 19
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.22 முதல் 08.52 வரை
ராகுகாலம்:
01.22 முதல் 02.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பிரதோஷ விரதம்

# சம்மாந்துறை நிலைமை; இந்திய தூதர்-ரஞ்சன் பேச்சு

கொழும்பு, ஜூன் 1

சம்மாந்துறைப் பகுதி நிலைமைபற்றி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இந்தியத் தூதர் எல். மெஹ்ரோத்திராவுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அமைச்சருடன் நடத்திய பேச்சுக்கள் குறித்த விவரங்களைத் தெரிவிக்க இந்தியத் தூதர் மறுத்துவிட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வாரமளவில் சம்மாந்துறையின் சில பகுதிகளில் இலங்கை இராணுவத்தினர் காவல் கடமையில் நிறுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங் காட்டி அந்தச் செய்திகளில் மேலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-எ]

# சரியல்ல

யாழ்ப்பாணம், ஜூன் 1

திருநெல்வேலி விவசாயக் கல்லூரிக்குச் சமீபமாக, கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடந்த மோதல் சம்பவத்தின் பின்னர், அமைதிப் படையினர் வழி நெடுகிலும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு சென்றனர் என்பது சரியல்ல என்றும்–

அப்பகுதியில் நடந்த சுற்றிவளைப்பின் போது, பலர் தாக்குதல்களுக்குஆளானர்கள் என்பதிலும் உண்மையில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றைய உதயன் செய்தியில் தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.

# இரசாயனத் தொழிற்சாலையும் ஓட்டுத் தொழிற்சாலைகள், உப்பளங்களும் வடக்கு - கிழக்கு மாகாணசபையிடம்

திருகோணமலை, ஜூன் 1

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, இறக்காமம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைகள், ஆனையிறவு தவிர்ந்த ஏனைய உப்பளங்கள் வடக்கு-கிழக்கு மாகாண அரசின் நிர்வாகத்தின்கீழ்கொண்டு வரப்படும்.

கைத்தொழில் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, திருகோணமலை செவின் ஐலண்ட் ஹோட்டலில் நடைபெற்ற மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கனிப்பொருள் வள துணை அமைச்சர் திரு. ஏ. ஜெயத்திலக்கா, வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் நளின் செனிவிரத்ன, வடக்கு - கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள், போக்குவரத்து கைத்தொழில் அமைச்சர் ஜனாப் எம். கே. அபுயூசுப், காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை சிமெந்து ஆலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை ஆகியன தொடர்ந்து மத்திய அரசின் நிர்வாகத்திலேயே இருக்கும் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இத்தொழிற்சாலைகள் தொடர்பாக விரைவில் புதிய நடைமுறை ஒன்று கடைப்பிடிக்கப்படும் என்று கூறப்பட்டது.

# கைதான மாணவனின் இருப்பிடத்தை அறிவிக்குக

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

கைது செய்யப்பட்ட கதிரேசு உதயநாதசிவம் என்னும் மாணவன் எங்கே இருக்கிறார் என்பதை வெளியிடுமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆவரங்காலில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்ட புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவன் கதிரேசு உதயநாதசிவம் எங்கே உள்ளார் என்பது இன்னும் மர்மமாக உள்ளது.

மாணவர்கள் கடத்தப்படுவதும், கொலைசெய்யப்படுவதும், காணாமற் போவதும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. மாணவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியவர்கள் இப்படியான செயல்களில் ஈடுபடுவது எமது சமுதாயத்தின் பிரச்சினைகளை மேலும் வளர்க்க உதவுமே தவிர, எவ்வகையிலும் தீர்க்க உதவாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

எதிர்கால சமுதாயத்தை

[6ஆம் பக்கம் பார்க்க]

# வடமராட்சி கிழக்கில் மோதல் சம்பவங்கள்

வடமராட்சி கிழக்கில் செவ்வாய்க்கிழமையும், நேற்றும் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆரம்பித்த மோதல்கள் நேற்றும் தொடர்ந்ததாகக் கூறப்பட்டது.

அப்பகுதியில்ஷெல்வீச்சுச்சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டவண்ணமிருக்கின்றன.

அப்பகுதிக்குள் எவரும் உட்செல்வதற்கோ, வெளியேறுவதற்கோ முடியாதிருக்கிறது.

இம்மோதல் சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை-ஆழியவளை வீதிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

உயிர்ச்சேதங்கள் எதுவும் உண்டா என்பதுபற்றி ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கவில்லை. (ஓ-114)

# தென்பகுதி வாழ் இந்தியருக்கு பாதுகாப்பு வழங்க அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 1

சிங்களத் தீவிரவாதிகளிடம் இருந்து கொழும்பு உட்பட மற்றும் தென் பகுதிகளில் வாழும் இந்தியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி இந்தியத் தூதரக அதிகாரி இலங்கை அரசிடம் கோரியுள்ளார்.

இந்திய வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் உட்பட இந்திய வர்த்தக ஸ்தாபனங்களுக்கு ஜே. வி. பி. அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும், அதனால் அவற்றில் கடமைபுரியும் இந்தியர்கள் பீதியடைந்துள்ளதாகவும் அந்த அதிகாரி இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதலே இந்த எதிர்ப்பு நடவடிக்கை என்று தெரியவருகிறது. [அ-3]

கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய நாடுங்கள்:
ஷப்ரூ
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

வெல்டிங் வேலை செய்வதற்கு வேலை தெரிந்தவரும் உதவியாளரும் தேவை. அத்துடன் வெல்டிங் உபகரணங்களும் விற்பனைக்குண்டு தொடர்பு: S. பாலசுப்பிரமணியம், மாட்டின் வீதி, 3/1 யாழ்ப்பாணம். (11109)

### கை மாறிவிட்டது

29-05 89 அன்று எனது பச்சை நிற ஏசியா சைக்கிள் முட்டாஸ்கடைச் சந்திக்கும் KKS வீதிக்கும் இடையில் தவறுதலாகக் கைமாற்றி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. எடுத்துச் சென்றவரின் சைக்கிள் என்னிடம் உண்டு. தயவுசெய்து மாற்றி எடுத்துச் சென்றவர் கொண்டுவந்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். N. யோகநாதன், மனோகாமன்ஸ் 277 - K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (706)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB, பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், பிறவுண் சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள் (COB'B) புறயிலர் குஞ்சுகள் (06-06-89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல:09, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (590)

### மணமக்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்கு(மாதவருமானம் 2500 ரூபா)யாழ் இந்து வேளாள குலத்தில் ஒரு மணமகளைச் சகோதரர்கள் தேடுகிறார்கள். மணமகன் வயது 34. உயரம் 5' 5'' அழகானவர். சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: 533, C/o உதயன், யாழ்ப்பாணம். (704)

### விற்பனைக்கு

விற்பனைக்கு பலவகையான பாம்ஸ் குரோட்டன்ஸ் சாடியுடன் 1. 6. 89 இல் இருந்து 15-06-89 வரை விற்கப்படும். சிதம்பரத்தை அஸ்பரகாஸ், எக்ஸ்சோரு பிறைட் ஒவ்யப்பான் என்பவையும் பொலித்தீன் பைகளில் விற்பனைக்குண்டு. பிளான்ட் பறைடைஸ் நேசரி, 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (11098)

முந்திரிகைத் தோட்டத்திற்கான (கல்வனைஸ்) இழுவைக் கம்பிகள் தூண்கள் (சீமெந்து), நல்இன பால்பசுக் கன்றுகள் விற்பனைக்கு. தொடர்பு: வைகை ரெக்ஸ்ரையில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (11102)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் கசெட் றேடியோ, T. V Fan, Cot Bicycle மற்றும் பல விற்பனைக்குண்டு. Sup'ka 343, பருத்தித்துறைரோட், அரசடி, நல்லூர். (11094)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் சேவற்குஞ்சுகள் 31ஆம், 1ஆம், 2ஆம் திகதி வில் விநியோகிக்கப்படும் (50 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ 3 50) இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலயத்திற்கு அண்மையில்) (589)

### புலமைப் பரிசில் பரீட்சை

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி (கணிதம், தமிழ்) யாழ்நகரில் உள்ள பிரபல புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். வெளியீடு: புதியகல்வி நிலையம். விலை ரூபா 14/50. மாதிரிப் பரீட்சை 3-6-89 சனி பி.ப 3.00 மணி. தமிழ்/ கணிதம் நடைபெறும். [701]

### A/L 90 இரசாயனம்

108, Brown Road, A/L 90 இரசாயனம் ஆசிரியர் சந்திஸ் 'வளங்கள்' ஆரம்பம்: 02-06-89 வெள்ளி 6.30 a.m. திங்கள், புதன், வெள்ளி 6.30 A.m. (705)

### பெயர் மாற்றம்

SRIRAM என ஆரம்பிக்கப்பட்ட எமது ஸ்தாபனமானது 01-06-89 தொடக்கம் SAI-RAM என பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி. (11107)

## போயரின் சேவைக்கு பாராட்டு

யாழ். நகரில் கடமையாற்றி அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய (U N H C R) பிரதிநிதி திரு. பேணுட் போயரின் சேவையைப் பாராட்டி பாராட்டுப் பத்திரம் ஒன்று புதிய பிரதிநிதியான திரு. சொலமனிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பாராட்டுப் பத்திரத்தை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி கையளித்தார். (ச-69)

## கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 1

''நோரூட்'' நிறுவன நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைபவரீதியாக நடைபெறும் அன்றைய தினம் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (இ-13)


உ

''சாமியே சரணம் ஐயப்பா''

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமிக்கு

## அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

நடாத்தும்

# மாதம் ஒரு ஹோமம்

பம்பலப்பிட்டி அஸ்வமேத யாக புண்ணிய பூமியில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமிக்கு

**எதிர்வரும் சனிக்கிழமை (03-06-1989)**

மாதம் ஒரு ஹோமம் எனும் விஷேட யாகம் நடைபெறும்

நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் தங்கள் பெயர், குடும்பத்தினர் பெயர், நக்ஷத்திரம், வேண்டுதல்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் யாகத்தில் உங்கள் பெயர்களும் சேர்க்கப்பட்டு விபூதி, குங்குமப் பிரசாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

**கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்**
(நாயன்மார்கட்டு)
அவர்களின் அருளாசியுடன்

''சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கிரியா கலாநிதி''

**ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக் குருக்கள்**
தலைமையில் யாகம் நடைபெறும்.

''சாமியே சரணம் ஐயப்பா''

ஸ்ரீ ஷடாக்ஷர சரவணபவ சர்மா (நிர்வாகச் செயலாளர்)   வி. குமரன்நாயுடு (செயலாளர் நாயகம்)

அனுப்பவேண்டிய முகவரி:

**" Sri Iyappathasan "**
**S. S Kurukkal**
Sabarimalai Sri Sastha Peedam,
120, Pickerings Road,
Kotahena - Colombo - 13.

ஓ சாமியே! சரணம் ஐயப்பா!! ஓ

[சி-2673]







# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவனடி இராமநாதன்**
(யாழ் பண்ணை அரசினர் வைத்தியசாலை ஊழியர்)

மலர்வு: 15 - 05 - 1965   உதிர்வு: 30 - 05 - 1987

உன் பிரிவால் வாடும்:
**நண்பர்கள்.**

கொற்றுவத்தை. (11111)

# இரண்டாம் ஆண்டு குருபூசை தினம்

தோற்றம் : 30-11-1936

மறைவு : 01-06-1987



**திருமதி வேதநாயகி கந்தசாமி**
[சுன்னாகம் ஜெயருப்ஸ், ஜெயகௌரி ஸ்தாபன உரிமையாளரின் அன்பு மனைவி]

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கின் இரண்டாம் ஆண்டின் நினைவு நாள் திதி 08-06-1989 அன்று உங்களது இல்லத்திலே ஆத்மா சாந்திப் பூசையும் உங்கள் நினைவாலயத்தில் விஷேச அபிஷேகமும் நடைபெற எல்லாம் வல்ல வேதநாயகரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
**அன்புக் கணவர், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

வேதநாயகி சமேத வேதநாயகர் கோவில்,
ஜெயருப்ஸ் வளவு,
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை. (835)


# ஹொங்கொங் நாட்டிற்கான உடனடி வேலைவாய்ப்புகள்

1. தச்சுத் தொழிலாளர்
2. மேசன்
3. லேபரர்
4. கம்பி வளைப்போர்
5. பிளம்பர்
6. பெயின்ரர்
7. எலக்ரீசியன்
8. பிளான்ட் ஒப்பறேற்றர்
9. கனரக சாரதி
10. மெக்கானிக்

சம்பள அளவுத் திட்டம் 16,000 — 36,000 வரை

மேலதிக விபரங்களுக்கு நாடுங்கள்;

**மியூனிஸ்ட் என்ரபிறைசஸ்**
156, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

(சி/2674)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**நாகராசா ஞானகுலசிங்கம்**
[தரன் குட்டி]
வல்வெட்டித்துறை

இன்று வல்வெட்டித்துறையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும்.

குடும்பத்தினர்

[11082]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**தாமோதரம்பிள்ளை தவபாலசுந்தரம்**
(ராஜா)

தோற்றம்: 08 - 11 - 1956   மறைவு: 18 - 04 - 1989

அன்னாரின் நினைவஞ்சலிப் பிரார்த்தனை 1 - 6 - 89 இன்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

உங்கள் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[11110]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறையில்

# ஐந்நூறு குடும்பங்களுக்கு உணவு முத்திரைகள் கிடைத்தன

குருநகர், ஜூன் 1

கொழும்புத்துறை, கிராமசேவையாளர் அலுவலகத்தில் 4 ஆவது தொடர் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன.

இத்தொடரில் ஒரு வருடத்திற்கு உரிய முத்திரைத்தொகுதிகள் அடங்கியுள்ளன.

முன்னர் வழங்கப்பட்ட உணவு முத்திரைகளின் இரட்டிப்பு பெறுமதியை உடைய தொகுதியில் 15 ரூபாவுக்கு 30 ரூபாவும், 20 ரூபாவுக்கு 40 ரூபாவும். 25 ரூபாவுக்கு 50 ரூபாவும் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் அடங்கியுள்ளன.

செவ்வாய் மட்டும் மேற்படி அலுவலகத்தில் 500 குடும்பங்களுக்கு புதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டதாக கிராமசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். எம். டொமினிக் உதயனுக்குத் தெரிவித்தார்.

(ஒ-51)

## ஆசிரியர் சம்பளம்

ஆசிரியர்களின் ஜூன் மாதத்துக்குரிய சம்பளப் பத்திரம் மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகள் பலவற்றுக்கு இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

யாழ் கல்வித் திணைக்களத்தால் அனுப்பப்படும் இப் பத்திரம் கிடைத்த பின்னர் தான் ஆசிரியர்களின் சம்பள விவரங்களைத் தயாரித்து தாமதமின்றி சம்பளத்தை வழங்க முடியுமெனவும் மேற்படி பத்திரம் கிடைப்பது தாமதமானால் ஆசிரியர்களின் சம்பளமும் தாமதமாகலாமெனவும் கூறப்படுகிறது.

யாழ் நகரில்

# போலியான ஆயுதங்களைக் காட்டி நடத்தப்பட்டு வந்த கொள்ளைகள்

## மடம் வீதியில் நால்வர் பிடிபட்டதை அடுத்து அம்பலம்

குருநகர், ஜூன் 1

போலி ஆயுதங்களுடன் கொள்ளை நடத்தி வந்த ஆறு பேர் கொண்ட ஒரு கோஷ்டி பற்றிய தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி ஞாயிறு இரவு யாழ் மடம் வீதியில் கொள்ளை நடத்தச் சென்ற நால்வர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டதை அடுத்து மேற்படி தகவல்கள் வெளிவந்தன.

கடந்த மாதம் கொழும்புத்துறைப் பகுதியில் பொதுமக்களால் முறியடிக்கப்பட்ட கொள்ளை முயற்சியில் ஈடுபட்டவர்களும் இவர்கள் தான் என்று கூறப்படுகிறது.

கடந்த 25 ஆம் திகதி நல்லூர் கோவில் வீதி வீடொன்றில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள், ரொக்கப்பணம் கொள்ளையிலும் இவர்களே ஈடுபட்டனர் என்று நம்பப்படுகிறது.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் கொழும்புக்குச் சென்றுள்ளனராம்.

(இ-51)

# இறைச்சி வியாபாரத் தொழிலுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது

## இறைச்சிக்கடை வியாபாரிகள் கூறுகின்றனர்

''எமது தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் அளவிட முடியாதது. இந்நிலையில் அங்கீகாரம், அனுமதி பெறாத வியாபாரிகளுக்குநல்லவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அனுமதி பெற்ற கடைகள் மூடப்பட்டதும் அவர்கள் பகிரங்கமாகவும், வீடு வீடாகவும் பாவனையாளருக்கு இறைச்சியை விற்றுள்ளார்கள்.

யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:

''தடை விதிககப்பட்ட 22-4-89 தொடக்கம் இன்று வரை இறைச்சி பாவிக்கும் ஹோட்டல்கள், தேநீர்ச் சாலைகள், சாப்பாட்டுக் கடைகளில் இறைச்சி உணவு இல்லாமல் இருக்கவில்லை.

சட்ட விரோத இறைச்சிக் கடைகளை அமைப்பதற்கு அனுமதி கொடுத்துள்ள காணி உரிமையாளர்கள் பணத்துக்கும் வேறு சுயநலத்துக்கும் இடம் கொடுத்துள்ளனர். அவர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை அகற்றுவதற்கு ஆவன செய்வார்களென எமது சங்கம் வேண்டுகின்றது.''

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(க-51)


● கனடா ● ஜேர்மன்
● இத்தாலி ● பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கனடா, இத்தாலி செல்வதற்கு பாஸ்போர்ட் தந்தவர்கள் உடனடியாக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

பஃரேன்

✶ Seaman (மாலுமி) தேவை

(C. D. C.) கப்பல் கடமைபுரிந்த அத்தாட்சிப் பத்திரத்துடன் வரவும்.

| | சம்பளம் |
|---|---|
| 10 மேசன் தொழிலாளர் | 65 B. D. |
| 10 தச்சுத் தொழிலாளர் | 65 B. D: |

V. T. R. TRAVELS

[உரிமையாளர் வே. தங்கராஜா]

41, 3rd Cross Street,
JAFFNA.

மல்லாகத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

Shatheesan Travels & Tours
Miller House
Mallakam Junction,
MALLAKAM.

(824)



★ கம்பியூட்டர் கல்வி ★

COMPUTER PROGRAMMING IN d BASE IV
(LATEST VERSION)

பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 4 - 6 - 89 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

Lotus 1-2-3 ✶ Word Processing

பயிற்சிக் காலம்: 1 1/2 மாதம்
ஆரம்பம்: 6 - 6 - 89 [செவ்வாய், வியாழன்]
சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-மாத்திரம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சிமுடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 03 - 06 - 1989




UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
(சி/2626)



★ வேலை வாய்ப்பு ★

(1) குவைற்:

(1) எயாபோட் கிளினேர்ஸ் — சம்பளம் - 50 KD.
வயது: 22 — 35 வரை - ஆங்கிலம் அல்லது அரபு தெரியவேண்டும்

(2) கனரக வாகனச் சாரதிகள் — சம்பளம் - 70 KD.
(வெளிநாட்டு லைசன்ஸ் - அனுபவச் சான்றிதழ்)

(3) வீட்டுச் சாரதிகள் -- சம்பளம் - 40 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(4) விற்பனையாளர் (SALESMAN) சம்பளம் - 70 KD.
(5 வருட அனுபவச் சான்றிதழ்)

(5) அலுமினிய (F) பிற்றர் ALUMINIUM FITTERS.
— சம்பளம் 65 - KD
அனுபவம் அலுமினியம் DOORS WINDOWS ETC.

(6) பெண் சுத்திகரிப்பாளர் (FEMALE CLEANERS).
— சம்பளம் - 30 KD.
வயது: 29 க்கு மேல்

(7) வீட்டுப்பணிப் பெண், (HOUSE MAID) வீட்டுப்பணிப்பையன் (HOUSE BOY)
— சம்பளம் - 30 KD.

(2) சவூதி:
அல்ராஜ் கோழிப்பண்ணைத் தொழிலாளா
— சம்பளம் - 400 SR.

(3) ஓமான்:
சகல தரத்தினருக்கும் வேலை வாய்ப்பு உண்டு

மற்றும்: ஜேர்மனி, சுவீற்சர்லாந்து, கனடா (குடும்பத்துடன் மட்டும்) ஆகிய நாடுகளுக்கும் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

T. V. TRAVELS
BROWN ROAD, KOKUVIL.
[சி-2165]






அன்னையின் பரிவுக்கு உன்னதச் சின்னம் பேபி ஷெரமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் உதவி இன்றி செயற்படும் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி

## எதிர்காலம் குறித்து உப அதிபர் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம் லங்காஆயுள் வேத வைத்தியக் கல்லூரிக்கு அரசின் உதவி கிடையாது. மாணவர்களுக்கு பரீட்சைகள் நடத்தும்—அவர்களைப் பதிவு செய்யும் அரசு அமைப்புக்களில் தமிழருக்கு அங்கத்துவம் இல்லை. இக் காரணங்களால் பெரும் இக்கட்டான நிலையில் இக்கல்லூரி செயல்படுகிறது.

இப்படிக் கவலை தெரிவிக்கிருர் மேற்படி கல்லூரியின் உப அதிபர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்ஞசித்தம்பி,

பரம்பரை பரம்பரையாக சித்த வைத்தியம் செய்பவர்கள் குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் ஒரே தமிழ் வைத்தியக் கல்லூரியாக விளங்கும் யாழ்ப்பாணம் லங்கா ஆயுள் வேத வைத்தியக் கல்லூரி பெரும் இக்கட்டான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி சுகந்தன் இன்ஞசித்தம்பி மேலும் கூறியதாவது:-

''ஆயுள்வேத வைத்திய சபைதான் கல்லூரி மாணவர்களைப் பதிவு செய்யும் வேலைகளைச் செய்து வருகிறது. அச்சபையில் முன்பு ஒரு தமிழர் அங்கம் வகித்து வந்தார். ஆனல் இன்று ஒரு தமிழரும் இல்லை.

அடுத்து மாணவர்களுக்கு பரீட்சைகளை நடத்தும் ஆயுள்வேத வைத்திய கல்லூரி சபையில் ஒரு தமிழரும் இல்லை. அத்துடன் இச்சபையினர்தான் இங்கு வந்து பரீட்சைகளை நடத்துகின்ருர்கள் பரீட்சையில் சித்தி அடைபவர்களை மீண்டும் கொழும்புக்கு அழைத்து நேர்முகப் பரீட்சைவைத்து சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அரச உதவியின்றி கல்லூரியில் படிக்கும் 150 மாணவர்களின் மாதக்கட்டணத்தில் தான் கல்லூரி இயங்குகிறது விரிவுரையாளர்கள் கூட கௌரவ பதவியே வகிக்கிருர்கள்.

பெரும் கஷ்ட நிலையில் உள்ள இக்கல்லூரியை வளர்க்க அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும். (இ - 3)


இதோ!

ஷெரமி வியர்க்குரு பவுடர்

ஷெரமி வியர்க்குரு பவுடர், வியர்க்குரு சரும அரிப்புகளால் சங்கடப்படும் போதுஇதமான, மென்மையான நிவாரணம் தருவதற்கென்றே விசேஷமாக உருவாக்கப்பட்ட மருந்தூட்டிய பவுடர்.

ஷெரமி வியர்க்குரு பவுடர், பிஞ்சுக் குழந்தையின் பஞ்சு மேனிக்கும் பாவிக்க ஏற்ற மென்மை வாய்ந்தது.




ஷெரமி வியர்க்குரு பவுடர் — சரும அரிப்புகளுக்கு சுக நிவாரணம்!


## அளவெட்டி அளவோலை விநாயகராலய அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

1 ஆம் பரிசு — 3841
2 ஆம் பரிசு — 6481
3 ஆம் பரிசு — 2449
4 ஆம் பரிசு — 4254
5 ஆம் பரிசு — 2813
6 ஆம் பரிசு — 1704
7 ஆம் பரிசு — 1809
8 ஆம் பரிசு — 8698
9 ஆம் பரிசு — 106
10 ஆம் பரிசு — 7511
11 ஆம் பரிசு — 3855
12 ஆம் பரிசு — 2547
13 ஆம் பரிசு — 9466
14 ஆம் பரிசு — 1810
15 ஆம் பரிசு — 4639
16 ஆம் பரிசு — 5390
17 ஆம் பரிசு — 9790
18 ஆம் பரிசு — 1526
19 ஆம் பரிசு — 5402
20 ஆம் பரிசு — 2933
21 ஆம் பரிசு — 7436
22 ஆம் பரிசு — 1907
23 ஆம் பரிசு — 9508
24 ஆம் பரிசு — 8315
25 ஆம் பரிசு — 3716

-நிர்வாகம்

[11104]

உ

## வலம்புரிச்சங்கு விற்பனைக்கு

தேவர்கள் அமிர்தம் கடைந்தபோது பாற்கடலில் வெளிவந்த அமிர்தம் மகாலக்ஷ்மி, அஷ்டவசுக்கள் இவற்றுடன் வெளிவந்த சங்கு பூசைக்கு மிக வேண்டிய சாதனமாகும். வலம்புரிச்சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சர்வ சௌபாக்கியங்களும் பெருகி சுபீட்சமும் தாண்டவமாடும்.

★ கோவில் தேவைக்கு விலைக்கழிவு உண்டு.

★ இயற்கை நிலையிலேயே உண்டு. விலை. 1200/- உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-

திரு. T. உருத்திரகோடீஸ்வரக் குருக்கள்
பிள்ளையார் கோவில் வடக்கு வீதி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

[826]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
27 - 02 - 1959

இறைவன் அடியில்
01 - 06 - 1987

அமரர்
செல்வன் கனகசூரியர் கிருஸ்ணமூர்த்தி
(N. A. B. PAPER CORPORATION VALAICHCHENAI)

சந்ததி தளைக்குமென சந்தோஷப்பட்டோம் அன்று (27- 02- 59) சாகடித்தனர் இன்று (01- 6- 87) அம்மாவிற்கு யார் உதவி என்று கேட்டீர்கள் அன்று சென்று வருகின்றேன் கவனமாய் இருங்கள் என்று பத்திரம் சொல்லிச் சென்றீர்களே! இவைதான் உங்கள் இறுதி வார்த்தைகளாயிற்றே ஐயா! உங்கள் வார்த்தைகளைச் சொல்லிக் கவலையடைந்த உமது ஆத்மா சாந்தியடைய வல்லிபுரசாமியை வேண்டி நிற்கும்

அருமை அம்மா, குஞ்சிஐயா,
குஞ்சி அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.

கந்த உடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(803)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. வடிவேலு அருந்தவராசா
(மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை)

அன்னையின் மடியில்: 13 - 04 - 1960
ஆண்டவன் அடியில்: 02 - 05 - 1989

எமது அன்பு அருந்தவமே!

எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த நீங்கள் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர்களே! மின்னல் போல் மறைந்தீர்களே! உங்கள் அருமை முகத்தை இனி நாம் எப்போ காண்போம்? நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு என்றென்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைவேண்டுகின்ருேம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, தாய், சகோதரர்கள்,
உற்ருர், உறவினர், நண்பர்கள்.

தம்பகாமம்,
பளை.

[802]

## கண்ணீர் அஞ்சலி



செல்வராசா தறுமா (அன்ரனி)

பிறப்பு :- 23-02-1954
இறப்பு : 02-05-1989

எத்தனை எத்தனை எண்ணங்கள் ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள், உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்,

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்,
சகோதரிகள். உற்ருர், உறவினர்.

23/7, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(830)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முருகன் செல்லத்துரை (செல்வம்)

தோற்றம்: 07 - 03 - 1925
மறைவு: 12 - 06 - 1988

திதி:- 01 - 06 - 1989

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாவிலங்கை,
சுன்னுகம்.

(806)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15- 03- 1906
மறைவு: 05- 06- 1986
நினைவு நாள் திதி: 01- 06- 1989

திரு. கதிர்காமத்தம்பி நல்லலிங்கம்
(இளைப்பாறிய P. W. D. ஓவசியரும், மலாயன் பென்ஷனரும்.)

பாசத்தின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய் எங்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து இன்றுடன் 3 ஆண்டுகள் சென்ருலும் நீங்கள் எங்கள் இதயங்களில் என்றும் வாழுகிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், பெருமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(801)


பிரயாணம்.... பிரயாணம்... பிரயாணம்....

"M" THREE TRAVEL

வழங்கும்

● சவூதி அரேபியா பிரயாணம்

| | | | |
|---|---|---|---|
| (01) | CLERK TYPIST | | |
| (02) | INVENTORY CLERK | 3 வெற்றிடங்கள் | 600 SR |
| (03) | SECURITY GUARD | 3 " | 600 SR |
| (04) | FOREMEN WITH DRIVING LICENCE | 4 " | 550 SR |
| (05) | DRIVER H / DUTY WITH MECHNICIAM | 5 வெற்றிடங்கள் | |
| (06) | DISEL MACHANIC WITH DRIVING LICENCE | 1 " | 450 SR |
| (07) | PEST CONTROL TECHNICIAN | 1 " | 500 SR |
| (08) | ARABIC SPEAKING ASST. MANAGER | 1 " | 400 SR |
| | | 1 " | 1000 SR (No Food) |
| (09) | SECRETARY CLERK WITH COMPUTER | 1 " | 450 SR |
| (10) | JANITORS | 52 " | 300 SR |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு உணவும், இருப்பிட வசதியும் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| (11) | A/C TECHNICIAN | 4 வெற்றிடங்கள் | SR 800 + 100 |
| (12) | ELECTRICIAN | 2 " | SR 500 + 100 |
| (13) | SECURITY GUARD | 4 " | SR 500 + 100 |

PASS PORT (கடவுச் சீட்டு) BOND (பொண்ட்) என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்;

★ நம்பிக்கை! ★ நாணயம்!!

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திர பவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2769)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

''ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்''.

பொருள்:

உயர்குடியில் பிறந்தவர் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றில் இருந்தும் வழுவாமல் இயல்பாகவே நன்னெறியில் வாழ்வர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22078

01 - 06 - 1989 த: பெ: இல: 13

## கிழக்கில் கொதிக்கும் எண்ணெய்..

அக்கரைப்பற்றில் முஸ்லிம் வர்த்தகர்கள் ஐந்துபேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக வந்திருக்கும் செய்தி தீ மேலிட்ட நெய்யாகும். சம்மாந்துறை, கல்முனை, மூதூர் என்று கிழக்கு மாகாணம் ஏற்கனவே எண்ணெய்ச் சட்டியாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது.

சம்மாந்துறைப்பகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்கள், அழிவுகள் ஏராளம். அரசியல் அதிகாரத்தில் அக்கறையே இல்லாத அப்பாவி முஸ்லிம்களும், தமிழர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உடன்பிறந்த சகோதரர்களாக வாழ்ந்தவர்கள், ஒருவரை மற்றவர் சந்தேகக் கண்ணோடும், பகைமை உணர்வோடும் பார்ப்பதற்குத் தூண்டப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களிடையே சமரசத்தையும், சமாதானத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. அமைச்சர்களும், ஏனைய அரசியல் தலைவர்களும் தொடர்ந்து அந்தப் பகுதிக்குச் சென்றுவந்த போதிலும், சமாதான மாநாடுகள் நடத்திய போதிலும், அனர்த்தங்களை விளைவித்தவர்கள் யார் என்பது இன்னமும் சரியாக, உறுதியாக, ஊர்ஜிதமாக இனங்காணப்படவில்லை.

அதனால் சம்மாந்துறை. கல்முனைப் பகுதிகளில் மூட்டப்பட்ட வன்செயல் தீ, முற்றாக அவிக்கப்படவில்லை; சம்மாந்துறை நிலைமை நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது என்றே கொள்ளப்படவேண்டும்.

அரை குறையாகத் தணிக்கப்பட்ட நெருப்பு, தீயசக்தி என்றகாற்று, சற்று லேசாக வீசினாலும் பற்றிக் கொண்டுவிடும். அக்கரைப்பற்றுக் கொலைகள் அதற்கே சாட்சி சொல்லி நிற்கின்றன.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிட்டுத் தமக்குத் தேவைப்படும் லாபத்தைத் தேடும் தீயசக்திகளை இனங்காணும் வரை அவை தண்டிக்கப்படும் வரை அடக்கப்படும் வரை கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்புத் தொடரும் என்பதில் சந்தேகம் இல்லை.

அண்ணன், தம்பியருக்கு இடையில் பகைமைத் தீயை மூட்டி, அவர்களை மோத வைத்தும், தாமே அனர்த்தங்களைப் புரிந்தும் வரும் தீய சக்திகள் கிழக்கில் ஒன்று இரண்டல்ல; பலவாகப் பெருகிவிட்டன என்பதால் அங்கு வாழும் மக்களின் பாதுகாப்பும் சந்தேகத்துக்கு உரியதாகிவிட்டது.

ஒவ்வொரு சாரார் மற்றொரு தரப்பார் மீது குற்றஞ் சாட்டுவதாலோ அல்லது குறை கூறி விரலைச் சுட்டுவதாலோ மக்களுக்குப் பூரணபாதுகாப்பை, அரசினாலேனும் சரி, ஆயுதப்படைகளாலேனும் சரி, உறுதி செய்ய முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

தமிழர்களும், முஸ்லிம்களும் தமக்கு ஏற்பட்ட, இனியும், ஏற்படக்கூடிய பாதிப்புக்களை உணர்ந்து எந்தத் தீய சக்தியாலும் தூண்டப்படாமல் இருக்கத் தமது மத்தியில் மன உறுதியை வளர்த்துக் கொள்ளவேண்டும். சிறு அசம்பாவிதங்களைப் பெரிதாக்காமலும் ஒருவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் அடுத்தவர் பார்த்துக் கொள்ளவும் வகை செய்யவல்ல புரிந்துணர்வையும், சகிப்புத் தன்மையையும், சமரச மனப் போக்கையும் வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

இல்லையேல் அரசியல் லாபம், சுயலாபம் தேட முனைந்து நிற்கும் தீயசக்திகளின் வலைக்குள் விழுந்து சிக்கி, அடிக்கடி துடித்து அழியும் அவலநிலை இரு சமூகத்தினருக்கும் ஏற்படும். இது குறித்து கவலைப்படாமல், இரண்டு சமூகத்தினர்களும் இனியும் குறுகிய வட்டங்களுக்குள் நின்று செயற்பட முனைந்தால், கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் தற்கொலை செய்வதாகிவிடும்!

## பிரதேச சபைகள் தோறும் ஆயுள்வேத மருத்துவமனை மூலிகைத் தோட்டங்கள்

கொழும்பு, ஜூன் 1

ஒவ்வொரு பிரதேச சபைப் பகுதியிலும் ஆயுள்வேத மருத்துவ மனை ஒன்றையும் மூலிகைத்தோட்டம் ஒன்றையும் அமைப்பது என்று சுதேசிய வைத்தியத் துறைக்கான அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

முதலாவது மருத்துவ மனையும் மூலிகைத் தோட்டமும் நிக்கரவெட்டியாவில் திறக்கப்பட்டிருப்பதாக சுதேசிய வைத்திய துணை துறை அமைச்சர் எச். பி. வன்னியநாயக்கா தெரிவித்தார்.

257 பிரதேச சபை பகுதிகளில் 176 இல் ஒரு ஆயுள்வேத மருத்துவமனை கூடக் கிடையாது.

இந்த 176 பிராந்தியங்களில் அடுத்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆயுள்வேத மருத்துவமனை நிறுவப்படும் என்று துணை அமைச்சர் சொன்னார். (இ - எ)

### பெயர்ப் பட்டியல்

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சின் நிவாரண கொடுப்பனவு ரூபா 4000 பெற்ற சகல சுயதொழிலாளர்களினதும் பெயர்ப் பட்டியல் பொது இடங்களில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

இதற்கான தீர்மானம் அண்மையில் அரச அதிபர் திரு. கே. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற மாவட்ட புனர்வாழ்வு இணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (சு-21)

## கோர்பச்சேவுக்கு எல்லைக்காந்தி விருது

இஸ்லாமபாத், மே 31

எல்லைக்காந்தி அப்துல் கபார்கான் சமாதானவிருது இந்த ஆண்டு சோவியத் ஜனாதிபதி மிக்செயில் கோர்பச்சேவுக்கு வழங்கப்பட்டது.

தேசிய அவாமி கட்சியினால் வழங்கப்படும் இவ்விருதை திரு. கோர்பச்சேவின் சார்பில் பெஷாவரில் சோவியத் தூதரக அதிகாரி ஒருவர் பெற்றுக் கொண்டார்.

பட்ஷாக்கான் சமாதான மாநாட்டின் முடிவில் இவ் விருது வழங்கப்பட்டன, (எ)

● வர்த்தகத் தடை போன்ற

# அமெரிக்க அரசின் நிர்ப்பந்தத்துக்கு இந்தியா பணியப் போவது இல்லை!

## புதுடில்லி அரசின் திட்டவட்டமான அறிவிப்பு

புதுடில்லி, மே 31

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்குப் பணியப் போவது இல்லை என்று இந்திய அரசு திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

அமெரிக்காவுக்கு எதிராக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறி அமெரிக்கா இந்தியாவுக்கு எதிராக பொருளாதார நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது தெரிந்ததே.

இந்தியாவுடன் பிரேஸில் மற்றும் ஜப்பான் மீதும் இத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது.

அமெரிக்காவின் இச்செயல் இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகப் புதுடில்லி அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து எமது பொருளாதாரக் கொள்கைகளை மாற்றப்போவது இல்லை என்று இந்தியா நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

'அக்னி' ஏவுகணையை இந்தியா பரீட்சித்ததைத் தொடர்ந்து அமெரிக்க இந்திய உறவுகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளதும் தெரிந்ததே.

இந்தியாவில் வெளிநாட்டு இன்ஸுரன்ஸ் மற்றும் வங்கிகள் ஆரம்பிக்கப்படுவது, அமெரிக்கர்கள் இந்தியாவில் வர்த்தக முதலீடுகளைச் செய்வது ஆகியவை அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைக்குள் வருகின்றன. (எ)

## எம்.ஜி.ஆர். பெருமையை இன்று உணர்கிறேன்; திரைப்பட இயக்குநர் ராஜேந்தர் அறிவிப்பு

சென்னை, மே 31

எம். ஜி. ஆர் எவ்வளவு பெரிய மனிதர் என்பதை இப்போதுதான் நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர் இல்லையே என்று ஏங்குகிறேன்'' என இயக்குநர் டி. ராஜேந்தர் கூறினார்.

மயிலாப்பூரில் வெள்ளிஇரவு அ. தி. மு. க. காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது.

திரைப்பட இயக்குனர் டி. ராஜேந்தர் பேசியதாவது:

ஒரு காலத்தில் தி. மு. க. தோட்டத்தில் பூத்த முல்லைப் பூவாக நான் இருந்தேன். ஆனால் அந்த மாற்றான் தோட்டத்தில் முல்லைக்கு இடமில்லை. முள்ளுக்குத் தான் உண்டு என்று எனக்குக் கொடுத்தார்கள் தொல்லை. என்வீட்டின் மீது தூக்கி எறிந்தார்கள் கல்லை.

இன்று ஆளும் கட்சியினர் அத்துமீறி நடத்தி வருகின்றனர் கொள்ளை. அதை மறைக்க வெளியில் அடிக்கிறார்கள் வெள்ளை.

எதிர்க்கட்சியாக இருந்த போது கருணாநிதி வசனம் எழுதிய படம் 'நீதிக்குத் தண்டனை' ஆட்சிக்கு வந்தவுடன் கொடுத்துவிட்டார் நீதிக்குத் தண்டனை.

சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவியை, பெண் என்றும் பாராமல் எட்டி உதைத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டிப்பேசி உள்ளனர்.

ஜெயலலிதாவைத் தன் சகோதரி என்று இப்போது கூறுபவர் தன் உடன் பிறந்த சகோதரிக்கு இப்படி நடந்திருந்தால் பார்த்துக் கொண்டிருப்பாரா?

தி. மு. க. வில் என்னை எதற்காக ஓரம் கட்டினார்கள்? கட்சியில் பதவி கேட்டேனா? இல்லை. தி. மு. க. வில் இருந்தபோது நான் எந்தத் தவறும் செய்யவில்லை.

உங்கள் சுயநலத்துக்காக கட்சியில் உள்ள தியாகிகளை வதைக்காதீர்கள் என்று சொன்னேன்.

துள்ளிக் குதிக்கும் புள்ளி மானைத் துறைமுகத்தில் அறிமுகம் செய்யப்போவதாகக் கூறினார்.

நடிகை அரசியலுக்கு வரலாமா? என்று கேட்ட நீங்களே இப்போது அறிமுகம் செய்தது என்ன இந்திரலோகத்துச் சுந்தரியா? முந்திரிக் கொடியா? என்றுதான் கேட்டேன். அதனால் ஓரம் கட்டப்பட்டேன்.

நான் அ. தி. மு. க. வில் சேர்வதற்கு எதிர்ப்பு இருப்பதாக கூறுகிறார். நான் எப்போது சொன்னேன், அ. தி. மு. க. வில் சேர்ந்து விட்டதாக? நான் அ. தி. மு. க. வில் சேரக்கூடாது என்பதில் உங்களுக்கு ஏன் இவ்வளவு கலக்கம்?

எனக்கு ஒருபழக்கம் உண்டு. செய்யாதே என்றால் செய்வேன். எனவே தொடர்ந்து என்னைச் சீண்ட வேண்டாம்.

உண்மையைச் சொல்கிறேன், எம். ஜி. ஆருடைய அருமை பெருமைகளை அவர் இறந்த பிறகு தான் நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

எம். ஜி. ஆர். உயிருடன் இருந்த போது நான் அவரை எதிர்க்கவில்லை. ஆர். எம். வீரப்பனைத்தான் எதிர்த்தேன். எம். ஜி. ஆர். உயிருடன் இல்லையே என்று இப்போது வருத்தப்படுகிறேன். எத்தனை இடையூறுகள் வந்தாலும் கருணாநிதியை எதிர்ப்பதை மட்டும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

இவ்வாறு டி. ராஜேந்தர் பேசினார். (எ-4)

## இந்தியாவின் கடன்

வாஷிங்டன், மே 31

இந்தியாவின் வெளிநாட்டுக்கடன் இந்தியப் பணத்தில் 96 ஆயிரத்து 320 கோடி ரூபா என்று அமெரிக்க வங்கி ஒன்றின் இரகசிய அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மார்ச்வரை இவ்வளவு கடன்களை இந்தியா பெற்றுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலஸ்தீனத்தில் கலவரம்

ஜெருசலம், மே 31

ஆக்கிரமிக்கப்பட்ட காஸா பிரதேசத்தில் நேற்று இஸ்ரவேல் படையினர் சுட்டதில் 22 பலஸ்தீனியர் படுகாயம் அடைந்தனர்.

இதனிடையில், அரபுப் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட யூதர்கள் சிலர், அரபுக் குடியிருப்புப் பகுதி ஒன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து ஒரு பலஸ்தீனப் பெண்ணைச் சுட்டுக் கொன்றனர்

இதை அமெரிக்க அரசு கண்டித்துள்ளது. [எ]

## வருகிற சனிக்கிழமை கலைஞருக்கு வயது 66

சென்னை, மே 31

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியின் 66ஆவது பிறந்ததினம் வருகிற சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பிறந்ததின விழாக் கொண்டாட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்

அன்று தமிழ் நாட்டிலுள்ள 85 லட்சம் வறிய குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கப்படும்.

மாதவருமானம் 300 ரூபா பெறும் குடும்பங்களுக்கே இலவச அரிசி வழங்கப்படும் (எ)

## போடோ போராளிகளின் 300 மணி நேர ஹர்த்தால்

கௌஹாத்தி, மே 31

'போடோ' இனப் போராளிகளின் 300 மணித்தியால ஹர்த்தால் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

அஸாம் மாநிலத்தில் வாழும் போடோ இன மக்கள் 'போடோலந்து' என்ற தனி நாடு கோரி போராடி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே 300 மணித்தியால 'பந்த்' நடத்தப்பட்டது. (எ)

# தமிழ் மக்களின் அன்பும் பண்பும் என்னை வெகுவாக கவர்ந்துள்ளன

## கனேடிய உயர் ஸ்தானிகர் கரோலின் மக்கஸ்கி பேச்சு

ஊர்காவற்றுறை, ஜூன் 1

''தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை நேரடியாகப் பார்வையிட வட மாகாணம் வருவதற்கு 3½ ஆண்டுகாலமாக நான் முயற்சி செய்து வருகின்றேன். இப்பொழுதுதான் என் எண்ணம் கைகூடியிருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் அன்பும் பண்பும் கல்வி அறிவின் முதிர்ச்சியும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன.''

அண்மையில் யாழ் விஜயம் மேற்கொண்ட கனேடிய உயர் ஸ்தானிகர் கரோலின் மக்கஸ்கி கடந்த 25ஆம் திகதி ஊர்காவற்றுறையில் தம்மைக் கௌரவித்து நடத்தப்பட்ட வரவேற்புசாரத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

அருட்திரு கிருபானந்தன் அடிகளாரின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த உபசாரத்துக்கு ஊர்காவற்றுறை கிறிஸ்தவ இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு. வினஸ் தலைமை வகித்தார்.

கனேடிய ஸ்தானிகர் மேலும் பேசுகையில், ''உலகின் நிலப்பரப்பில் இரண்டாவது பெரிய இடத்தைக் கனடா வகித்தாலும் 2 கோடியே 60 இலட்சம் மக்கள் தான் அங்கு வசிக்கின்றார்கள். அங்கு பல நாட்டு மக்கள் குடியேறி வசித்து வருகின்றார்கள் என்று கூறினார்.

தமது செயலாளர் சகிதம் விஜயம் மேற்கொண்ட கனேடிய ஸ்தானிகர், 1986 ஆம் ஆண்டுக்குப் பின்பு சேதமடைந்த ஊர்காற்றுறைப் பகுதி மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, சுங்கத் திணைக்களக் கட்டடங்கள், வாடி வீட்டுக் கட்டடம், புனித ஜேம்ஸ் தேவாலயம் மற்றும் சேதமடைந்த வீடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

வரவேற்பு நிகழ்ச்சியில் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவர் திரு. செபஸ்ரியன், அருட்திரு. கிருபானந்தன் அடிகளார் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். (க)

## சர்வோதய உதவியுடன் வீடுகள்

கிளிநொச்சி ஜூன் 1

கிளிநொச்சி சர்வோதய மாவட்ட நிலையம், அசம்பாவிதங்கள் காரணமாக முற்றாக வீடுகளை இழந்த 30 குடும்பங்களுக்கு புதிதாக வீடுகளை கட்டிக்கொடுக்க உள்ளது.

பூநகரி, பளை, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இந்த வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

மாத இறுதிக்குள் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (சு-76)

## வீரபத்திரர் ஆலயத்தில்

அச்சுவேலி வரணன் அருள்மிகு வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேகம் ஜூன் 25 ஆம் திகதி நடைபெறும்.

தற்பொழுது ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். கந்தசாமி தலைமையில் இளைஞர்கள் திருப்பணி சிரமதானம் மூலம் திருப்பணி வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுமார் இரண்டு [illegible] செலவில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. [illegible]

## மாணவரின் ஆரோக்கியம் வளர விளையாட்டுப் போட்டி அவசியம்

### யாழ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் உரை

குருநகர், ஜூன் 1

''வருங்கால சந்ததியினரான மாணவர்கள் மன உறுதியுடன் வளர வேண்டும் மன உறுதி வளர வேண்டுமானால் தேக ஆரோக்கியம் முக்கியமானது. தேக ஆரோக்கியம் வளர விளையாட்டுப் போட்டிகள் அத்தியாவசியமானவை''

அண்மையில் நடைபெற்ற குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய யாழ்-பிரதேச பிரதித் திட்டமிடல் [illegible] மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு அ. ஸ்ரானிஸ்லோஸ் தலைமையுரை நிகழ்த்தினார்.

கௌரவ விருந்தினர் அருட்செல்வி லில்லி ஓசாவின் உரையைத் தொடர்ந்து திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார்.

போல் இல்லம் முதலாம் இடத்தையும், பீற்றர் இல்லம் இரண்டாம் இடத்தையும், யோண் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

ஆசிரியை திருமதி இசற். சம்பந்தர் நன்றி கூறினார். (சு-51)

## வாழ்வாங்கு வாழ்ந்தவர்

முன்னாள் ரி. ஆர். ஆர். ஓ. தலைவர் திரு. கா. விசுவலிங்கம் பற்றிய ஒரு நினைவுக்குறிப்பு.

இந்த ஜூன் மாதமுதல் தேதியுடன் விசுவலிங்க ஐயா மறைந்து மூன்று வருடங்களாகின்றன.

சீர்குலைவே பொதுநெறியாகிவிட்ட வாழ்க்கைச் சுழியோட்டத்தில் மறைந்த மனிதர்களை நினைப்பதற்கே முடியாத சூழலில் சீவிப்பதே சிக்கலாக இருக்கும் பொழுது ''ஞாபகார்த்தங்கள் தூரத்து விடயங்கள் ஆகிவிடுகின்றன.

ஆனால், எல்லா மறைவுகளும் மறக்கப்படக் கூடியவையல்ல, மறக்கப்படுபவையுமல்ல. இன்றைய இன்னல்களுக்கிடையேயும் நடப்பு வாழ்க்கைக்கு முகங்கொடுக்கும்திறனைத்தந்து மறைந்தவர்கள் சிலர் உள்ளனர்.

விசுவலிங்க ஐயா அப்படிப்பட்ட ஒருவர். அவரது வாழ்க்கை எமக்கு முக்கியமாவதற்கான ஒரே காரணம், 1983 –1986 க்கால சட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றை முன் நின்று ஒழுங்கு செய்தமையாகும் தான் ஒரு நல்ல சைவனாகவிருந்தும், தன்னை யாழ்ப்பாணப் பண்பாட்டின் பெறுபேறாகவே கருதியிருந்தும், அவர் மத, பிரதேச எல்லைகளைக் கடந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நிவாரண வேலைகளை ஒழுங்கு செய்தார். அந்த ஒருங்கமைப்பு ரி. ஆர் ஆர். ஓ. நிறுவனம்மூலம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தைவிட்டு எல்லோரும் ஓடியநேரம் விசுவலிங்க ஐயா யாழ்ப்பாணத்துக்கு வந்து, யாழ்ப்பாணத்திலிருந்து பணியாற்றினார்.

ரி. ஆர். ஆர். ஓ. ஒரு முக்கிய நிறுவனமாகவே விளங்கியது அக்காலத்திலேயே. கொழும்பில் தொடங்கிய அந்த நிறுவனத்தை ஐயா தமிழ் மண்ணுக்குரியது ஆக்கினார். ஆனால் அதேவேளையில் அதை யாழ்ப்பாணத்துக்குரிய ஒரு பிரதேச நிறுவனமாக்காது, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை இணைத்துத் தொழிற்படும் நிறுவனமாக்கினார்.

அதற்கும் மேற் சென்று மலையகத்திலிருந்து வந்தவர்களுக்கு கிளிநொச்சியிற் குடியிருப்பு வழங்கினார்.

### தானே குறைத்தவர்

விசுவலிங்கஐயரினது சேவையின் மிகமுக்கியமான அம்சம் அவரது அயரா உழைப்பாகும். அந்த உழைப்பே அவர் உயிரைக் குடித்தது. அவர் 'ஆறுதலாக' இருந்திருப்பின் நீண்ட காலம் சீவித்திருப்பார் என்பது வைத்தியர்கள் தெரிவித்த கருத்து. அது அவருக்கே சொல்லப்பட்டது. அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை தன் வாழ்நாளைத் தானே குறைத்துக் கொண்டார் சேவையின் நிறைவில் தன்னைப் பூர்த்தி செய்து கொண்டார்

இத்தகைய மனிதர்களின் வாழ்க்கையைத் தான் 'வாழ்வு' என்கின்றோம்.

'அந்தவாழ்வுகளின்' நினைவு எங்களையும் மனிதர்களாக்கட்டும்.

மனிதர்களை மதிக்கச் செய்யட்டும்.

விசுவலிங்கஐயரின் 'வாழ்வு' ரி ஆர். ஆர். ஓவில் நிறைவு பெற்றது.

அவர் பெயர் நிலைக்கும்.

கார்த்திகேசு சிவத்தம்பி

## இலவச நூல்

அரியாலை, ஜூன் 1

பனை அபிவிருத்திச் சபை 'பனம் உணவுப் பொருள்களின் செய்முறைகள்' என்னும் சிறு கைநூல் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது

பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயத்தில் இந்நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராஜா தெரிவித்துள்ளார். [க-18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்

மயூரா சென்ரர்

13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

உதயன்

01 - 06 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடைவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

மயூரா சென்ரர்

13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# ஆகஸ்ட் ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சை
# வினுத்தாளில் சில மாற்றங்கள்

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குரிய தற்போதைய வினுத்தாளின் அமைப்பும் மாதிரியும் வருகிற ஆகஸ்ட் பரீட்சையின் போது மாற்றி அமைக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இதனைத் தெரிவித்தார்.

பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், தாவரவியல் பாடங்களுக்கான வினுத்தாளின் முதலாவது (Paper One) பகுதியின் அமைப்பில் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

வினுத்தாளின் இரண்டாவது பகுதியில் (Part Two) 'ஏ' பிரிவு வினுத்தாள் அமைப்பும் அப்படியே இருக்கும்.

வினுத்தாள் 3ஆவது பகுதியில் (Part Three) 'பி' பிரிவில் எட்டு வினுக்களில் 4 வினுக்களுக்கு விடை எழுதும்படி பரீட்சார்த்திகள் இனிமேல் கேட்கப்படுவர்.

தற்போது ஆறு கேள்விகளைக் கொடுத்து 4 கேள்விகளுக்கு விடை அளிக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகிருர்கள்.

விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கான வினுத்தாள்களிலும் அதிக வினுக்கள் இனிமேல் இடம் பெறும். ஆனுல் விடைகளை, இப்போது கேட்கப்பட்டு வரும் எண்ணிக்கையான வினுக்களுக்கே பரீட்சார்த்திகள் எழுதலாம் என்று ஆணையாளர் மேலும் சொன்னுர். (ஒ-எ)

## மட்டுவில் வாசி சுட்டுக்கொலை!

சாவகச்சேரி, ஜூன் 1

சாவகச்சேரி, மட்டுவிலில் கடந்த திங்கட்கிழமை இரவு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தா. சின்னத்துரை என்றும், தபாற் கந்தோரில் பணிபுரிந்த முன்னுள் ஊழியர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-31]

## ● இந்த வயதிலும் இவர்களுக்கு வெளிமாவட்ட இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். கல்வித் திணைக்களத்தில் 53 வயதைத் தாண்டிய இரு உத்தியோகத்தர்களுக்கு வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம்வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக 50 வயதைத் தாண்டிய அரச ஊழியர்களுக்கு வெளி மாவிட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப் படுவதில்லை.

சம்பந்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர் களுக்குமான இடமாற்ற உத்தரவு கடந்த மே முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டதாயினும் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு விண்ணப்பித்திருந்தனர்.

எனினும் இன்றுமுதல் இந்த இருவரும் தமது இடமாற்றத்தை வெளி மாவட்டத்தில் பொறுப்பேற்க வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளனராம். (ஒ-9)

## இந்திய ஹெலிக்கொப்டர் தீப்பிடித்து நொருங்கியது
### மண்டபத்தில் ஐவர் மரணம்

சென்னை, ஜூன் 1

மண்டபம் அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய கடற்படையின் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த ஐந்து பேரும் உயிரிழந்தனர்.

இராமநாதபுரம், மண்டபம் ரயில் நிலையத்துக்கு அருகே இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்துக் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டிருப்பதாக புதுடில்லியில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யந்திரக் கோளாறு காரணமாக ஹெலிக்கொப்டரை கீழே இறக்கியபோது உயர் சக்தி மின்கம்பியில் பட்டு தீப்பிடித்து நொருங்கி வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

எமது இன்றைய மாபெரும் வெளியீடு
ரஜனிகாந்த் – சோபஞ் – ரகுவரன் நடித்த
- சிவா -
வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

### நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலைய
### கல்வி நிதி
### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்தினரின் கல்வி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த 28-05-89 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முடிவுகள் பின்வருமாறு :-

1ஆம் பரிசுக்குரிய இல. 0731
2ஆம் பரிசுக்குரிய இல. 0542
3ஆம் பரிசுக்குரிய இல. 2026

ஆறுதல் பரிசுபெறும் அதிஷ்ட இலக்கங்கள் பின்வருமாறு 2322, 0237, 0206, 0201, 1846, 0368, 2002.

மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களுக்குரியவர்கள். நிலைய நிர்வாகிகளிடம் சீட்டுக்களை சமர்ப்பித்து பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம்.

பாிசில்களை அன்பளிப்பு செய்தவர்களுக்கும், ஆதரவு தந்தவர்களுக்கும் நன்றி.

நிர்வாகிகள்
[11114] நாவாந்துறை சென்மேரிஸ் ச. ச. நிலையம்.

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் வேலை நிறுத்தம் தொடர்கிறது
### அதனுல் விரிவுரைகளும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்வதால், பல்கலைக்கழக விரிவுரைகள் பாதித்துள்ளதுடன் வேலைகளும் ஸ்தம்பித்துள்ளன.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இவ்வேலை நிறுத்தத்தில் பல்வேறுதுறை ஊழியர்களும் இறங்கியுள்ளதால் பலதரப்பட்ட சேவைகளும் பாதிக்கப் பட்டுள்ளதாத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்புக்கு நேற்றுச் சென்றுள்ள தொழிற்சங்கத் தூதுக்குழு சம்மேளனப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி திரும்பிய பின்பே வேலை நிறுத்தம் தொடர்பாக முடிவு செய்யப்படும் எனத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-3]

## நூலகம் எரிப்புக் குறித்து கைஸ் விடுத்த அறிக்கை

பல சகாப்த சந்ததிகளின் அறிவுப் பசிக்கு விருந்தாகிய யாழ் பொதுசன நூலகம் இழக்கப்பட்டது ஒரு தலைமுறையின் இழப்பாக அமைகின்றது.

தமிழ் மக்களின் பண்பாட்டுச் சின்னமாகவும் அறிவியல் அரங்கமாகவுமிருந்த யாழ் பொதுசன நூலகம் எரிக்கப்பட்ட கொடூரத்தை நினைவுகூர்வோமாக.',

மாணவர், இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) யாழ் நூலகம் 1981 இன் முதலாம் திகதிஎரிக்கப்பட்டதை நினைவு கூருமுகமாக விடுத்துள்ள துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. [ஒ-3]

## 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### மாணிக்கம் மனேகரன்
(மனே — கஸ்ரோ)
01-6-87

நீ வாழ்ந்த காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும் அக்காலப் பகுதியில் பல்வேறு கஷ்டங்களையும், துன்பங்களையும் சிரித்த முகத்துடன் கடந்து சென்று நண்பர்களினதும், தோழர்களினதும் துயர் துடைப்பதில் முன்னணியில் நின்ருய். நீ வாழ்ந்த வாழ்வு எமது தோழர்களுக்கு என்றும் ஆதர்சமாக திகழ்கின்றது. எமது இதயங்களில் என்றும் உயிர்த்துடிப்புடன் கொலுவீற்றிருப்பாய். உன் லட்சியப் பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறுகின்ருேம்.

நண்பர்கள், தோழர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### S. P. சுப்பிரமணியம் (S. P. S.)
(பிரபல வர்த்தகர், காரைநகர்
முன்னுள் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்)

தோற்றம்: 08-10-1916 மறைவு: 11-06-1988
திதி : 01 - 06 - 1989

அன்னுரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சேதுபதி வாசம்,
சயம்பு வீதி,
காரைநகர். (11113)

## மாணவன் மரணத்துக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

சம்மாந்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது பல்கலைக்கழக மாணவன் எஸ். எச். எம். பாரீட் மரணமானது குறித்து யாழ், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

மோதல்களிடையே மாணவ சமுதாயம் அகப்பட்டுக்கொள்வது கவலைக்குரியது. தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்வேண்டிய நேரத்தில் மாணவர்களை அரசியல் பகடைக் காய்களாகப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்— என்று ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்வேலியில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலியில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் சிவநேசன் (நேசன்) என்பவர் மரணமானுர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் அந்தோனியார் உற்சவம்

நெடுந்தீவு, ஜூன் 1

நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று முதலாம் திகதி ஆரம்பமாகி 13 தினங்கள் நடைபெற உள்ளது.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருள் திரு.எம்.எம். வி. அமிர்தகுமார் ஆராதனைகளைநடத்துவார். [ச-111]

### கைதான---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருள்மயமாக்கும் இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்படுவது சொல்லில் மட்டுமின்றி செயலிலும் காட்டப்படவேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்களின் இன்றைய உடனடிக் கோரிக்கையாகும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### 17 முச்சக்கர. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கென்றே இந்த முச்சக்கர சைக்கிள் வண்டிகள் சமூகசேவை அமைச்சினுல் அனுப்பப்பட்டன.

40 முச்சக்கர சைக்கிள்கள் தமக்குத் தேவை என யாழ் சமூக சேவைப்பகுதி கேட்டிருந்தது.

முதலில் அனுப்பப்பட்ட பதினேழு விண்ணப்பங்களுக்கான சைக்கிள்களே தற்பொழுது வந்துசேர்ந்துள்ளன.

ஏனையவை அடுத்த கட்டமாக வந்துசேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தற்பொழுது வந்து சேர்ந்த சைக்கிள்கள் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் விரைவில் வழகப்படும். (ஒ-9)

### பல்கலைக்கழகங்...:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தால் அப் பல்கலைக்கழகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அவரே உடனடி பரிகாரம் காணமுடியும் என்று கருதப்படுகிறது.

அதனுல் தகுதிவாய்ந்த அதிகாரிகளை ஒவ்வொரு பல்கலைக் கழகத்துச்கும் நியமிக்க உயர் கல்வி அமைச்சு ஆலோசித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் பல்கலைக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளினுல், பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிகளை செய்து வருவதாகவும் அறியவருகிறது. (அ-3)

### சிறந்த நடிகை----

ராக இளையராஜாவும், சிறந்த பின்னணிப் பாடகராக எஸ். பி. பாலசுப்பிரமணியமும் பரிசு பெற்றனர்.

சிறந்த பின்னணிப் பாடகியாக சித்திரா பரிசு பெற்ருர்.

சிறந்த பொழுதுபோக்குப் படமாக 'கயமத சி கயமதக்' என்ற ஹிந்தித் திரைப்படம் தெரிவு செய்யப்பட்டது. (அ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லத்துரை பாக்கியம்

ஐயனர் வீதி, சண்டிலிப்பாய் திருமதி பாக்கியம் செல்லத்துரை 30-5-89இல் சிவபதமடைந்தார். இவர் வ. செல்லத்துரை (Retired Chief Permanent Way Inspector, Malayan Railways) அவர்களின் அன்பு மனைவியும், இராசமணி, சிவஞானம், திருஞானம், ஞானமணி, சிவமணி, ஞானகுருபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வரதராசா, பாலசுப்பிரமணியம், சிவபாதம், இராசலட்சுமி, பத்மராணி, ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவிச்சந்திரன், அனுஷா, சந்திரகுமார், சந்திரகாந்தன் சுகன்னியா, வாசுகி, சந்திரபவான், வான்மதி, பாலேந்திரா, விக்னேந்திரா, சிறீமதி, சுமதி, பாமதி, பிரதாபன், தயாமதி, கேமலா, சுதர்சன், துவாஸ்க்கர், வயிரா, மகேந்திரன், சிவபாதசுந்தரம், லிங்கராசா, தயாநிதி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், உமாசங்கர், ஆதித்தன், பார்த்திபன், றுமேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னுரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-6-89) வியாழக்கிழமை ஐயனுர் வீதி, சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 2-30 மணியளவில் மானிப்பாய், பிபிலி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம்.

ஐயனுர் வீதி,
சண்டிலிப்பாய். (838)

தகவல்:
வ. செல்லத்துரை.

### திருமதி இரத்தினம்மா இரத்தினசபாபதிஐயர்

கொக்குவில் சோதிட பரிபாலன மடத்தைச் சேர்ந்த திருமதி இரத்தினம்மா - இரத்தினசபாபதி ஐயர் அவர்கள் காலமானுர்.

அன்னுர் காலஞ்சென்ற சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி லலிதாம்பாள் யோகேஸ்வரசர்மா, **(வாக்கிய பஞ்சாங்க உரிமையாளர்)** பிரம்மஸ்ரீ வெங்கடேசஐயர், காலஞ்சென்ற கதிரேசஐயர் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி விஜயாம்பாள் - நடராஜக் குருக்கள் அவர்களின் வளர்ப்புத் தாயாரும், பிரம்மஸ்ரீ யோகேஸ்வரசர்மா, திருமதி இராஜராஜேஸ்வரி-வெங்கடேச ஐயர் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இ. சி. இரகுநாதையர் அவர்களின் அன்பு மைத்துனியும், திருமதி கமலாம்பிகை அம்மா இரகுநாதையர் அவர்களின் அன்புச் சகோதரியும், செல்வன் - இரகுநாதையர், செல்வி ரூபஜெனனி, செல்வி ரூபவதனி, செல்வன்-இரத்தினரூபசர்மா, செல்வன் இரத்தின பிரபாகரசர்மா, செல்வன் கமலசரவணபவசர்மா, செல்வன் வித்தியாபரசர்மா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [01-06-1989] காலை 10-30 மணியளவில் அன்னுரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதிடபரிபாலனமடம்,
கொக்குவில்.
(11117)

தகவல் :
இ. வெங்கடேச ஐயர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 01 — 06 — 89 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org